***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.206/2024 – P.W. 1 (LW-1)***

| | |
|---|---|
| *Name* | செல்லப்பா |
| *Father/Husband's Name* | சோமு |
| *Village* | ரெங்கநாதபுரம் |
| *Age* | *47* |

**1முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.10.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள் ஆவார்கள். கடந்த 12.09.2024-ம் தேதியன்று இரவு சுமார் 9.00 மணி முதல் 9.30 மணியிருக்கும். நான் என் மனைவி ஷீலா மற்றும் குழந்தைகளுடன் வீட்டிலிருந்தபோது, ஆஜர் எதிரிகள் 3 வரும் எங்கள் வீட்டு வாசல் முன்பாக நின்றுக்கொண்டு, எங்களுக்குள் இருந்த வேலி பிரச்சனைக்காக ஆஜர் எதிரிகள் எனது மனைவியை குச்சிக்காரி மவளே, தேவடியா மவளே என்று திட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஏன் திட்டுறீர்கள் என்றும், பேசிக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டிருந்தபோதே மணியன் மகன் ரமேஷ் என்பவரை என்னை குப்புற தள்ளிவிட்டதில் எனக்கு தோள்பட்டையில் அடிபட்டுவிட்டடது.

2. மணியன் என்பவர் மண்வெட்டியால் எனது முதுகு பக்கத்தில் வெட்டினார். எனது சத்தத்தை கேட்டு வந்த வெள்ளிநாதன் மகன் கவியரசன், ராஜேந்திரன் மகன் தமிழரசன் ஆகியோர்கள் ஓடி வருவதை பார்த்த ஆஜர் எதிரிகள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்னர் பட்டாபிராமன்

என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் 7-8 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தேன். நான் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை 2 முறை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். எனக்கு 3 பிள்ளைகள். முதன் மகன் பெயர் தமிழ்வேந்தன் அவருக்கு 25 வயதிருக்கும். 2 வது மகள் சினேகா வயது அவருக்கு 22 வயது. 3 வது மகள் சிவரஞ்சனி அவருக்கு 20 வயது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அந்த நேரத்தில் மேற்கண்ட எனது பிள்ளைகளுடன் தான் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எதிரி கலாவிற்கும் என் மனைவிக்கும் வாய்தகராறு நடந்துக்கொண்டிருந்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். கேட்டேன். எனது பிள்ளைகள் அங்கு இருந்தார்களா என்றால் அவர்கள் வீட்டிற்குள் இருந்தார்கள்.

2. வேலி தகராறு தொடர்பாக தலையாமங்கலம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த புகாரில் கிராம பஞ்சாயத்து மூலமாக வேலியை அளந்துக்கொள்ளுங்கள் என்று போலீசார் சொல்லவிட்டார்கள். அதன்பிறகு கிராம பஞ்சாயத்து மூலமாக இடத்தை அளந்து கம்பி வேலியை நான் வைத்துள்ளேன். அதில் கருங்கால் வைத்துள்ளேன். போலீசார் என்னை விசாரித்தபோது என்னை குப்புற தள்ளிவிட்டதால் பின்பக்க முதுகில் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஒரு நபர் குப்புற விழுந்தததில் எவ்வாறு பின்பக்கம் காயம் ஏற்பட்டதென்று போலீசார் கேட்டார்களா என்றால் நான் மயக்கமாக இருந்ததால் நான் சொல்லவில்லை.

3. எனக்கு எப்போது மயக்கம் தெளிந்தது என்றால் ஒரு மணி நேரத்தில் மயக்கம் தெளிந்துவிட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது எத்தனை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஒரு பேப்பரில் வாங்கினார்கள். எழுதாத பேப்பரில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை.

நான் போலீசார் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தார்கள் என்றால் நான் படித்து பார்க்கவில்லை.

4. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தற்கு பின்னிட்டு எவ்வளவு நேரத்தில் போலீசார் வந்தார்கள் என்றால் நான் சிகிச்சையில் சேர்ந்த அன்று இரவு நேரத்தில் வந்தார்கள். எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. கிராம பஞ்சாயத்தில் வந்து வேலியை அளக்கும்போது, ஒரு அடி எதிரிகள் இடத்தில் இருந்ததா என்றால் எங்களுடைய மரம் அவர்கள் இடத்தில் இருந்தது. அதை வெட்டி வேலியை நேராக வைக்க சொன்னார்கள். நான் மரத்தை வெட்டிவிட்டு நேராக வேலியை வைத்துள்ளேன். 2ம் எதிரி ரமேஷ் திருமணமாகி தனிக்குடித்தனமாக உள்ளார் என்றால் சரிதான். அவர் வீடு எனது வீட்டிலிருந்து எவ்வளவு தூரத்திலுள்ளது என்றால் 4,5 வீடுகள் தள்ளியுள்ளது. இந்த வழக்கு சம்பவம் நடந்தாக சொல்லப்படும் நேரத்தில் 2ம் எதிரி எனது வீட்டிற்கு வரவில்லை என்றாலும், அவர் அவரது வீட்டில் தான் இருந்தார் என்றாலும் சரியல்ல. வேலி வைத்தற்கு பின்னிட்டு 3ம் எதிரி கலா அவரது வீட்டு குப்பையை கூட்டி எனது வீட்டு வேலியில் வைத்துவிடுவதால் எனது மனைவிக்கும், அவருக்கும் அடிக்கடி வாய்தகராறு ஏற்படும் என்றால் சரிதான். அடிக்கடி என் மனைவிக்கும் 3ம் எதிரிக்கும் இடையே பிரச்சனை வந்துக்கொண்டிருக்கும்.

5. நான் முதல்விசாரணையில் என் வீட்டு வாசலில் சண்டை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை போலீசார் என்னை 2 முறை விசாரித்தபோது சொன்னேனா என்றால் போலீசார் என்னை கேட்கவில்லை. அதனால் நான் சொல்லவில்லை. போலீசார் 2 முறை விசாரித்தபோதும், என்னை கேட்டார்களா என்றால் இல்லை. அன்று இரவு சண்டை நடக்கும்போது எனது மகனும் நான் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு 1ம் எதிரி மணியனை அடிக்க சென்றபோது, அதில் நான் தடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டதென்றால் சரியல்ல.

6. அன்றையதினம் என் மகனுக்கு உடல் நிலை சரியில்லாமல் எழுந்திரிக்க முடியால் படுத்த படுக்கையாக இருந்தார். எனது மகன் சண்டை நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் வீட்டிற்கு தூங்கிக்கொண்டிருந்தாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ நேரத்தில்

எதிரிகள் 3 பேர், நாங்கள் 3 பேர் வீட்டு வாசலில் சண்டை நடந்து முடியும் வரை எனது மகன் எழுந்திரிக்கவில்லையா என்றால் அவர் வீட்டிற்குள் படுத்திருந்தார். மேற்படி விவரத்தை நான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் போலீசார் அவ்வாறு என்னை விசாரிக்கவில்லை. போலீசார் எங்கள் ஊரில் வந்து விசாரணை செய்தபோது எனது மகனை விசாரித்தார்களா என்றால் இல்லை. எனது இரண்டு மகள்களை விசாரித்தார்களா என்றால் இல்லை.

7. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், சண்டை நடந்ததாக சொல்லப்படும் நாளில் எனது மனைவிக்கும் 3ம் எதிரிக்கும் இடையே வாய்தகாராறு ஏற்பட்டதென்றாலும், அப்போது நானும் என் மகனும் மண்வெட்டி போன்ற ஆயுதங்களை எடுத்துக்கொண்டு நாங்கள்தான் எதிரிகளை தாக்க சென்றோம் என்றாலும், என்னுடைய மகள்கள், மனைவி அனைவரும் எங்களை தடுத்தபோது இருட்டில் தடுமாறி நான் விழுந்ததில் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அந்த காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.10.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT*
*Mannargudi*
*CC.No.206/2024 – P.W. 2 (LW-2)*

| | |
|---|---|
| *Name* | ஷீலா |
| *Father/Husband's Name* | செல்லப்பா |
| *Village* | ரெங்கநாதபுரம் |
| *Age* | *45* |

**1முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.10.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். அ.சா.1 செல்லாப்பா எனது கணவர் ஆவார். கடந்த 12.09.2024-ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் எனக்கும், கலா என்பவருக்கும் வேலிசம்மந்தமாக தகராறு ஏற்பட்டது. அப்போது, எதிரி கலா என்பவர் குச்சிக்காரி மகளே, தேவடியா மகளே என்று அசிங்கமான திட்டினார். அப்போது என் கணவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சத்தம் கேட்டு வந்த எனது கணவர் எதிரி கலாவிடம் யாரை சத்தம் போடுகிறீர் என கேட்டுக்கொண்டிருந்த போது எதிரி ரமேஷ் என்பவர் எனது கணவரை பிடித்து கீழே தள்ளிவிட்டார். அதில் என் கணவர் குப்புற விழுந்ததில் எனது கணவரின் தாவாங்கொட்டையில் அடிபட்டது.

2. எனது கணவரால் எழுந்திரிக்க முடியாமல் இருந்ததால் மணியன் என்பவர் மண்வெட்டியால் எனது கணவரின் முதுகிலும் தோள்பட்டையிலும் வெட்டிவிட்டார். நாங்கள் சத்தம் போடவோ வெள்ளிநாதன் மகன் கவியரசனும், ராஜேந்திரன் மகனும் ஓடிவந்து எனது கணவரை தூக்கியபோது ரத்தம் வந்தது. அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் எங்களை பார்த்து இந்த முறை தப்பித்துவிட்டிங்க இன்னொரு முறை பார்த்துக்கொள்கிறோம் என்று கூறி விட்டு ஓடிவிட்டார்கள்.

3.பின்னர் அருகிலிருந்த பட்டாபிராமன் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு என் கணவரை சிகிச்சசைக்காக அழைத்து சென்றார். என் கணவர் 7 நாட்கள் மருத்துவமனயில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தார். நான் எனது கணவருடன் மேற்படி மருத்துவமனையில் இருந்தபோது மறுநாள் தலையாமங்கலம் போலீசார் என்னையும், எனது கணவரையும் விசாரித்தார்கள். எனது கணவரை விசாரித்த நேரத்தில் என் கணவர் தான் கையெழுத்து போட்டார். நான் எந்த கையெழுத்தும் போடவில்லை. பின்னர் போலீசார் 6 நாட்கள் கழித்து என்னை வீட்டில் வைத்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 9 ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் எனது கணவருடன் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் சரிதான். நான் எத்தனை மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சம்பவம் நடந்து 1/2 நேரத்திற்குள்ளாக ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. உடனே மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். என் கணவருக்கு- 1 மணி நேரம் தான் மயக்கம் இருந்தது. பிறகு கண் விழித்துவிட்டார். வரும் வழியில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. நேராக மருத்துவமனைக்கு தான் வந்தோம். போலீசார் என்னை விசாரித்போது எனது மகனும், 2 மகளும் சம்பவம் நடந்தாக சொல்லப்படும் அந்த நேரத்தில் என்ன செய்துக்கொண்டிருந்தாரக்ள் என்பது குறித்து விசாரித்தார்களா என்றால் மருத்துவமனையில் அதெல்லாம் கேட்கவில்லை. மறுநாள் என்னை விசாரித்தபோது என் மகன் தூங்கிகொண்டிருந்ததாகவும், என் மகள்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்ததாகவும் சொன்னேன்.

2. சம்பவம் நடந்தாக சொல்லப்படும் நேரத்தில் நானும், எனது மகள்களும் என் கணவரை மத்தியசம் செய்யும், அதில் அவர் தடுமாறி கீழே விழுந்ததில் எற்பட்ட காயத்தை எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்த காரணத்தினால் தான் என் பிள்ளைகளை இந்த வழக்கு தரப்பு சாட்சிகளாக போலீசார் விசாரிக்க சொல்லவில்லை. எதிரிகள் தரப்பில் எனது மகன் கல்லால் அடித்துவிட்டதாக கூறி புகார் கொடுத்தாக என்னிடம் கேட்டார்கள். நான் என் மகன் அவ்வாறு செய்யவில்லை என்றும், அவன் தூங்கி கொண்டிருந்ததாகவும் அவர்களிடம் சொன்னேன்.

3. எனது மகன் யாரை கல்லால் அடித்தாக போலீசார் சொன்னார்கள் என்றால் 1ம் எதிரி மணியனை கல்லால் அடித்தாக சொன்னார்கள். 1ம் எதிரி மணியன் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்னை வீட்டில் வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்ததற்கு பின்னிட்டு 10 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அப்போது என் மகனையும், மகள்களையும் விசாரித்தார்களா என்றால் எனது மகள்கள் சென்னைக்க சென்றுவிட்டார்கள்.எனது மகனை விசாரித்தபோது அவர் சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டார்.

4. நான் சொல்வதுபோல் சம்பவம்ள துவும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கும் எதிரி கலாவிற்கும் வாய்தகராறு ஏற்பட்டபோது எனது கணவரும், என் மகனும் எதிரிகளை அடிக்க மண்வெட்டியை எடுத்துக்கொண்டு சென்றபோது நானும் என் மகள்களும் என் கணவரை மத்தியசம் செய்தபோது அவர் தடுமாறி கீழே விழுந்த காயத்தை பயன்படுத்தி என் கணவர் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.10.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.